புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தொல்காப்பிய ‘மரபியல்’ சிந்தனைகள்

**முனைவர் உ.கருப்பத்தேவன்**
*உதவிப்பேராசிரியர் – தலைவர் (பொ)*
*இலக்கியத் திறனாய்வியல் துறை, தமிழியற்புலம்,*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 21.*

## முன்னுரை

வாழ்க்கை என்பது மரபுடையது. ‘இலக்கியம்’ வாழ்க்கையிலிருந்து தோன்றுவதால் அதுவும் மரபினைப் பெறுகின்றது. இலக்கியத்தைப் படிப்போர்க்கும் மரபு பற்றிய அறிவு இன்றியமையாதது. தொல்காப்பியர் இலக்கியங்களில் அமைய வேண்டி இலக்கிய மரபுகளைச் சுட்டிக்காட்டி, அதற்கான கோட்பாடுகளை மரபியலில் வகுத்துக் கூறியுள்ளார். தமிழ் இலக்கண நூல்களுக்கு முற்பட்டதான தொல்காப்பியமும், தமக்கு முன்னர் நூலோர் கண்ட முறைமையின் மரபுநெறிக்கு இலக்கணம் வகுத்துள்ள பான்மையும், மரபுக்குக் கட்டுப்படும் சிறப்பும் தனித்தன்மையுடையன. இதனால் தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருளதிகாரங்களில் நூன் மரபு, மொழிமரபு, தொகைமரபு, விளிமரபு, மரபியல் என்னும் இயல்களை பகுத்தமைத்துள்ளார். தொல்காப்பியர் உலக வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இரண்டிலும் இலக்கணமரபு காத்தவர் என்னும் நிலையிலேயே தொல்காப்பியர் தம் நூலை நூல் மரபில் தொடங்கி மரபியலில் நிறைவு செய்துள்ளார். இவ்வாறு தமிழில் பேசப்பெறும் மரபுகள், தொல்காப்பியத்தில் நிலைத்த இடம்பெறுவதால் இவ்ஆய்வுக் கட்டுரை அது குறித்து ஆராய்வதாக அமைகின்றது.

## மரபியல் - விளக்கம்

‘மரபியல்’ என்பதற்குத் தமிழ் லெக்சிகன் “Marapiyal; A Section of Grammar which treats of the idiomatic use of words, as in Tolkaapiyam”[1] எனக் கூறுவதால் ‘மரபியல்’ என்பது முன்னோர் வழங்கிய சொல்வழக்கைக் கூறும் இலக்கணப் பகுதி என அறிய முடிகின்றது. முன்னோர் வழங்கிய சொல்வழக்கைக்கூறும் இலக்கணப்பகுதி ‘மரபியல்’ என்றே செந்தமிழ் அகராதியும்[2] மெய்யப்பன் தமிழ் அகராதியும்[3] விளக்கம் கூறுகின்றன. நர்மதாவன் தமிழ் அகராதியும்[4] க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியும்[5] “சொல் வழங்கும் இலக்கண மரபைக்கூறும் பகுதி The part of ancient grammer which deals with convention of words, உயிரினங்கள் எவ்வாறு பண்பு நலன்கள் பெறுகின்றன என்பதைப் பற்றிய படிப்பு (Study of Genetics); என்னும் விளக்கங்கள் இவஅ; கராதிகளில் கூறப்பெற்றுள்ளன. “முன்னோர் வழங்கிய சொல் வழக்கைக்கூறும் பகுதி; மரபிலக்கணம்” என்னும் விளக்கத்தை கழகத்தமிழ் அகராதியும்[6], கௌரா தமிழ் அகராதியும்[7] குறிப்பிடுகின்றன. இதனால் மரபியல் என்பது முன்னோர் வழங்கிய சொல் வழக்கைக் கூறும் இலக்கணப் பகுதியாகவும், மரபிலக்கணமாகவும், உயிரினங்கள் எவ்வாறு பண்பு நலன்களைப் பெறுகின்றன என்பது குறித்த படிப்பாகவும் இருப்பதை அறியலாம். முன்னோர்களால் வகுக்கப்பட்டு வரலாற்று முறைமைகளான எழுத்து, சொல், பொருள், வாழ்வியல் வழக்கங்களை விளக்கும் இலக்கணப் பகுதியாக மரபியல் அமைகின்றது.

## ‘மரபு’ - விளக்கங்களும் கருத்துக்களும்

மரபு என்பதற்கு மு.இராகவையங்கார் “எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதல்”[8] என்றும், சில இலக்குவனார், “மரபு என்பது தொன்றுதொட்டு

*வருவது; அறிவால் உயர்ந்தோரால் உண்டாக்கப்பட்டு வழங்கி வருவது*[9] *என்றும், மா.இராசமாணிக்கனார் "மக்களுக்கு வாழ்வும் வளமும் தாழ்வும் சாவும் உண்டு. இவ்வாறே சொற்களுக்கும் இந்நான்கும் உண்டு. மக்களைச் சார்ந்தே சொற்கள் இந்நான்கு நிலைகளையும் அடைகின்றன. மக்கள் பல நூற்றாண்டுகளாக ஒரு சொல்லை ஒருமுறைமை பற்றிய வழங்கி வருவாராயின், அவர்தம் பின்னோர் அம்முறையிலேயே அதனை வழங்குதல் மரபு"*[10] *என மரபு என்பதற்கு விளக்கம் கூறியுள்ளார்.*

*ச.சிவகாமி மரபு என்பதற்கு, "காலம் காலமாகத் தொடர்ந்து பின்பற்றப்பட்டும் எதுவாயினும் மாறாது அமைவது பற்றி மரபு எனல் சுட்டத்தக்கது. ஏற்கனவே நிலவிவரும் கொள்கைகள், கோட்பாடுகள், முறைகள், மரபு எனத் தோன்றும். ஆயின் அடிப்படை மாறாதிருக்க அதனில் வேரூன்றிய வளர்ச்சியும் விரிவும்கூட மரபில் புதுமை சேர்க்கலாம். எனவே பழங்காலந்தொட்டு அமைவதைப் பழமரபு எனவும், அதில் மாறிவரும் புதுமையினைப் புதுமரபு என்றும் கூறலாம். மாறுவது மரபல்லவெனத் தோன்றினும், அம்மாற்றம் பயிற்சியும் ஆட்சியும் செல்வாக்கும் பெற்று விளங்கும்போது அதுவும் மரபாக உருவாதல் உண்டு"*[11] *என மரபு தோன்றும் முறையை விளக்கியுள்ளார்.*

*சா.கிருஷ்ணமூர்த்தி, "மரபு எனினும் இலக்கணம் எனினும் எல்லாம் ஒருபொருட் பன்மொழி. காலமும் இடனும்பற்றி வழக்குத் திரிக்காமலும், திரிந்தவற்றிற்கேற்ப வழுப்படாமைச் செய்வதொருமுறைமை (பேரா.தொல்.பொருள்.நூற்.313). காலந்தொறும் இடந்தொறும் வழக்குத் திரிந்தவற்றிற்கேற்ப வழுப்படாமற் செய்வதோர் முறைமை (நச்சி.தொல்.பொருள்.செய்.1)"*[12] *என்று உரைச்சொற் களஞ்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். உயர்ந்தோர் கூறும் வழக்கே காலப்போக்கில் மரபு ஆகின்றது. வழக்கை உருவாக்குவதும் கையாள்வதும் உயர்ந்தோரே ஆவர்.*

*'மரபு' என்பதற்கான தெளிவான விளக்கத்தை ந.சுப்புரெட்டியார், "மொழி சொற்களால் ஆனது; சொற்கள் யாவும் பொருள்களை உணர்த்தும் குறியீடுகளாகும். சொல்வோனது உள்ளக்கிடக்கையைக் கேட்போன் சரியாக உணர வேண்டுமாயின், சொற்களின் பொருளை இருவரும் நன்கு தெரிந்திருத்தல் வேண்டும். பண்டைக்காலத்தில் எவ்வாறு சொற்களுக்குப் பொருள் வழங்கினார்களோ அந்த மரபு கெடாது அச்சொற்களை வழங்கி வரல் வேண்டும்"*[13] *எனத் தந்துள்ளார்.*

*தமிழண்ணல் "அடிமரமும் வேரும் போன்றது மரபு. பூவும் கனியுமாய் எவ்வளவு பூத்துக்குலுங்கினாலும் முன்னையவற்றை விடுத்து அவை அமைவதில்லை. மரபுமீறல் என்பதும் முன்னைய அடிப்படையை வைத்தே செயற்படுவது. மரபில் வளர்ச்சி காட்டுவதே இலக்கியத்தில் தனித்திறன் வெளிப்பாடு"*[14] *எனக் கூறியுள்ளார். இவ்விளக்கங்களால் உயர்ந்தோரால் உருவாக்கப்படுவதே மரபு. பழக்க வழக்கம் முதலியன நடைமுறை வாழ்வியலில் பின்பற்றப்படுவது; அது பண்பாட்டோடு நெருங்கிய தொடர்புடையது. எவ்வகை மாற்றத்திற்கு உட்பட்டாலும் அதன் ஆணிவேர் வலிமை குன்றாது. மரபு என்பது முந்தைய தலைமுறையினர் இன்றைய தலைமுறையினர்க்கு விட்டுச் செல்லும் ஒரு கருத்தாகவும் படைப்பாகவும் நம்பிக்கையாகவும் அமையலாம் எனப் புரிந்து கொள்ள முடிகின்றது. தொல்காப்பியத்தில் 'மரபு' என்னும் ஆட்சி தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரத்தில் பத்து இடங்களிலும், சொல்லதிகாரத்தில் இருபத்தைந்து இடங்களிலும், பொருளதிகாரத்தில் ஐம்பத்து நான்கு இடங்களிலும் மரபு என்னும் சொல்லாட்சி பயின்று வந்துள்ளது*[15] *என்பர். எழுத்ததிகாரத்தில் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் நூன்மரபு, மொழிமரபு, தொகைமரபு என்னும் மூன்று இயல்களின் தலைப்புக்களில் 'மரபு' என்னும் ஆட்சி இடம்பெற்றுள்ளது. இங்கு 'மரபு' என்னும் சொல் 'இலக்கணம்' என்னும் பொருள் தருகின்றது.*

***"சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே" (தொல்.எழுத்து.நூன்மரபு, நூற்.1:4)***

***"தொல்லியல் மருங்கின் மரீஇய மரபே" (தொல்.எழுத்து. புள்ளி மயங்கியல், நூற்.60:3)***

***"அம்மரபு ஒழுகும் மொழிவயி னான" (தொல்.எழுத்து. குற்றியலுகரப் புணரியல், நூற்.12:3)***

*என்னும் இடங்களில் 'மரபு' என்னும் சொல்லாட்சி 'இலக்கணம்' என்னும் பொருளில் வந்துள்ளது.*

***"இன்பெறல் வேண்டுஞ் சாரியை மரபே"***

***(தொல்.எழுத்து. குற்றியலுகரப்புணரியல், நூற்.64:2)***

***"அன்ன மரபின் மொழியிடைத் தோன்றி"***

***(தொல்.எழுத்து. குற்றியலுகரப் புணரியல், நூற்.75:3)***

*என்னும் இடங்களில் 'மரபு' என்னும் சொல் 'மரபு' என்னும் பொருளில் வந்துள்ளது.*

***"அன்ன மரபின் தொகை வயினான"***

***(தொல்.எழுத்து. தொகைமரபு, நூற்.1:4)***

***"கொளத்தகு மரபின் ஆகிடன் உடைத்தே"***

***(தொல்.எழுத்து.புள்ளியமங்கியல், நூற்.77:4)***

*என்னும் இடங்களில் 'மரபு' என்னும் ஆட்சி 'முறைமை' என்னும் பொருளில் வந்துள்ளன.*

**சொல்லதிகாரத்தில்**

*தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில் 'விளிமரபு' என்பது ஓரியலின் தலைப்பாகும்.*

***"மயங்கல் கூடா தம்மர பினவே***

***(தொல்.சொல்.கிளவியாக்கம், நூற்.11:3)***

***"எண்ணுங் காலும் அதுவதன் மரபே"***

***(தொல்.சொல்.வேற்று.மயங்க.நூற்.47:1)***

***"பண்டியல் மருங்கின் மரீஇய மரபே"***

***(தொல்.சொல்.வேற்று.மயங்.நூற்.7:2)***

***"எதிர்மறுத்து மொழியினும் தத்தம் மரபின்"***

***(தொல்.சொல்.வேற்று.மயங்.நூற்.24:1)***

***"தொல்நெறி மரபின தோன்ற லாறே"***

***(தொல்.சொல்.வேற்று.மயங்.நூற்.27:3)***

***"அன்னமர பினவே யாகுபெயர்க்கிளவி"***

***(தொல்.சொல்.வேற்று.மயங்.நூற்.31:6)***

***"ஏனைப் பெயரே தத்தம் மரபின"***

***(தொல்.சொல்.பெயரியல், நூற்.21:5)***

***"தொழிற்படக் கிளத்தலும் வழக்கியல் மரபே"***

***(தொல்.சொல்.பெயரியல்.நூற்.49;2)***

*என்னும் இடங்களில் மரபு என்னும் ஆட்சி 'இலக்கணம்' எனப் பொருள் தருகின்றது.*

***"ஏனை உருபும ; அன்ன மரபின" (தொல்.சொல்.வேற்று.மயங்.நூற்.28:1)***

***"அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே" (தொல்.சொல்.எச்ச.நூற்.55:2)***

*என்னும் இடங்களில் 'மரபு' என்னும் ஆட்சி முறைமை என்னும் பொருளில் பயின்று வந்துள்ளன.*

***"அன்ன மரபின் இரண்டொடுந் தொகை இ" (தொல்.சொல்.வேற்று.மயங்.நூற்.29:4)***

*என்னுமிடத்தில் 'மரபு' என்னும் சொல்லாட்சி மரபு, இலக்கணம் என்னும் பொருள்களில் வந்துள்ளது. 'விளி மரபு' என்பது முறைமையையும் இலக்கணத்தையும் குறிக்கும்.*

***"நினையுங் காலைத் தத்தம் மரபின்" (தொல்.சொல்.பெயரியல், நூற்.18:3)***

***"அன்ன மரபின் வினைவயினான" (தொல்.சொல்.பெயரியல்,நூற்.19:3)***

***"அன்ன மரபின் குறிப்பொடு வரூஉம்" (தொல்.சொல்.வினையியல்.நூற்.18:2)***

***"அன்ன மரபின் காலங்கண்ணிய" (தொல்.சொல்.வினையியல், நூற்.32:2)***

*என்னும் இடங்களில் மரபு என்னும் ஆட்சி 'மரபு' என்னும் பொருளில் வந்துள்ளன.*

***"பாலறி மரபின் அம்மூ வீற்று" (தொல்.சொல்.வினை.நூற்.14:1)***

***"பெயர்க்குறி மரபின் செவ்வெண் இறுதியும்" (தொல்.சொல்.இடை.நூற்.42:2)***

***"வாரா மரபின் வரக்கூறுதலும்" (தொல்.சொல்.எச்ச.நூற்.26:1)***

***"என்னா மரபின் எனக்கூறுதலும்" (தொல்.சொல்.எச்ச.நூற்.26:2)***

***"சிறப்புடை மரபின் அம்முக்காலமும்" (தொல்.சொல்.எச்ச.நூற்.31:2)***

*என்னுமிடங்களில் 'மரபு' என்னும் ஆட்சி 'இயல்பு' என்னும் பொருளில் பயின்று வந்துள்ளன.*

***"தத்தம் மரபின் தோன்றுமன் பொருளே" (தொல்.சொல்.உரி.நூற்.93:4)***

*என 'மரபு' என்னும் சொல் வரலாற்று முறைமையைச் சுட்டுகின்றது.*

***"அந்நான் கென்ப பொருணிலை மரபே" (தொல்.சொல்.எச்ச.நூற்.23:5)***

*என்னுமிடத்தில் மரபு என்னும் சொல் இலக்கணம், முறைமை என்னும் பொருள்களில் வந்துள்ளது.*

**பொருளதிகாரத்தில்**

தமிழின் மரபினைக் காக்கும் பொருட்டு, அதன் சிறப்பினை விளக்குவதற்காகவும் தொல்காப்பியம் பொருளதிகாரம் எழுதப்பட்டது. தமிழ்மொழியில் மட்டுமே வாழ்க்கை விளக்கமாகப் பொருளதிகாரம் உள்ளது. தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் இறுதியாக மரபியல் இடம்பெற்றுள்ளது.

***"மரபுநிலை திரியா மாட்சிய வாகி" (தொல்.பொருள்.அகத்.நூற்.48:1)***

என்னுமிடத்தில் மரபு வரலாற்று முறைமையைச் சுட்டுகின்றது. 'மரபு' என்னும் சொல் 'மரபு என்னும் பொருளில்,

***"சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று" (தொல்.பொருள்.புறத்.நூற்.5:20)***
***"ஐவகை மரபின் அரசர்பக்கமும்" (தொல்.பொருள்.புறத்.நூற்.16:2)***
***"இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்" (மேலது, 16:3)***
***"பாலறி மரபில் பொருநர் கண்ணும்" (மேலது, 16:7)***
***"ஒன்றிய மரபின் பின்தேர்க் குரவையும்" (மேலது, 17:6)***
***"தெறற்கரு மரபின் சிறப்பின் கண்ணும்" (தொல்.பொருள்.கற்பு.9:2)***
***"ஆங்கனை மரபின் இயலும் என்ப" (தொல்.பொருள்.செய்.நூற்.161:5)***

என்னும் இடங்களில் பயின்று வந்துள்ளன.

***"சிறப்புடை மரபினவை களவென மொழி" (தொல்.பொருள்.களவு.நூற்.9:5)***
***"கொளற்குறி மரபின் கிழவன் கிழத்தியை" (தொல்.பொருள்.கற்பு.1:2)***
***"கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே (தொல்.பொருள்.கற்பு.நூற்.1:3)***
***"அகம்புகல் மரபின் வாயில்கட் குரிய" (தொல்.பொருள்.கற்பு.நூற்.11:6)***
***"காமம் கண்ணிய மரபிடை தெரிய" (தொல்.பொருள்.பொருள்.நூற்.2:2)***
***"சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇ" (மேலது, 2:6)***
***"செய்யா மரபில் தொழிற்படுத் தடக்கியும்" (மேலது, 2:7)***
***"அறத்தியல் மரபிலள் தோழி யென்ப" (மேலது, 11:2)***
***"நிலைக்குரி மரபின் இருவீற்றும் உரித்தே" (மேலது, 24:2)***
***"கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே" (மேலது, 46:2)***
***"நாட்டியல் மரபின் நெஞ்சுகொளில் அல்லது" (தொல்.பொருள்.பொருள்.நூற்.51:6)***
***"தத்தம் மரபின் தோன்றுமன் பொருளே" (தொல்.பொருள்.உவமை.நூற்.1:3)***
***"மரபே தூக்கே தொடைவகை எனாஅ" (தொல்.பொருள்.செய்.நூற்.1:3)***
***"நிலைக்குரி மரபின் நிற்கவும் பெறுமே" (மேலது, 59:2)***
***"மரபே தானும்" (மேலது,76:1)***
***"நால்நெறி மரபின தொடைவகை என்ப" (மேலது, 84:2)***
***"தத்தம் இயலான் மரபொடு முடியின்" (தொல்.பொருள்.செய்.நூற்.201:3)***
***"மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை" (தொல்.பொருள்.மரபி.நூற்.92:1)***

என்னும் இடங்களில் மரபு என்னும் சொல்லாட்சி 'முறைமை' என்னும் பொருளில் பயின்று வந்துள்ளன.

***"ஏனை மரபின் ஏனோரும் உரியர்" (தொல்.பொருள்.அகத்.நூற்.26:1)***
***"மனைக்குரி மரபினது கரந்தை அன்றியும்" (தொல்.பொருள்.புறத்.5:14)***
***"இருமூன்று மரபின் கல்லொடு புணர" (மேலது, 5:21)***
***"அனைநெறி மரபிற் றாகும் என்ப" (மேலது, 8:3)***
***"தோன்றா மரபின என்மனார் புலவர்" (தொல்.பொருள்.பொருள்.நூற்.50:3)***
***"பொழிப்பும் ஒரூஉம் செந்தொடை மரபும்" (தொல்.பொருள்.செய்.நூற்.86:1)***
***"மெய்யுறு மரபின் தொடைவகை தாமே" (மேலது, 97:1)***
***"மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பின்" (தொல்.பொருள்.மரபி.நூற்.1:1)***
***"சொல்லிய மரபின் இளமை தானே" (மேலது, 26:1)***
***"மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்" (மேலது, 93:1)***
***"மரபுநிலை திரியா மாட்சியவாகி" (மேலது, 95:1)***
***"அதர்பட யாத்தலொடு அனைமர பினவே" (மேலது, 99:2)***

என்னுமிடங்களில் 'மரபு' என்னும் சொல்லாட்சி 'இலக்கணம'; என்னும் பொருளில் பயின்று வந்துள்ளன.

***"மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்" (தொல்.பொருள்.கற்பு.நூற்.9:30)***
*என்னுமிடத்தில் மரபு என்னும் சொல் மரபு, முறையை ஆகிய பொருள்களில் வந்துள்ளது.*
***"விரவியும் வரூஉம் மரபின என்ப" (தொல்.பொருள்.உவமை.நூற்.2:1)***
*என்னுமிடத்தில் மரபு என்னும் சொல் வழிமுறையையும்,*
***"மரீஇய மரபின் வழக்கொடு வருமே" (மேலது, 21:2)***
*என்னுமிடத்தில் வழக்கு முறையையும் குறிக்கின்றது.*
***'தொன்னெறி மரபின் கற்பிற்குரியர்" (தொல்.செய்.நூற்.182:5)***
*என்னுமிடத்தில் மரபு என்னும் சொல் பரம்பரையைக்குறிக்கின்றது.*
***"பொருள்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்" (தொல்.பொருள்.செய்.நூற்.166:3)***
*என்னுமிடத்தில் மரபு என்னும் சொல் இயல்பு என்னும் பொருளில் வந்துள்ளது. தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் பிறப்பியல், புணரியல், உருபியல், உயிர்மருங்கியல் என்னும் நான்கு இயல்கள் தவிர பிற ஐந்து இயல்களில் பத்து இடங்களிலும், சொல்லதிகாரத்தில் வேற்றுமையியலை விடுத்து ஏனைய இயல்களில் இருபத்தைந்து இடங்களிலும், பொருளதிகாரத்தில் மெய்ப்பாட்டியல் நீங்கலாக ஏனைய இயல்களில் ஐம்பத்துநான்கு இடங்களிலும் மொத்தமாக எண்பத்தொன்பது இடங்களில் மரபு குறித்து விளக்கியுள்ளார்.*

***மரபு காத்தல்***

*காட்சி அல்லது கருத்துப்பொருளான ஒன்றை உணர்தவே 'சொல்' உருவானது. அச்சொல் மக்களிடையே வழங்கப்பட்டு சான்றோரால் ஏற்கப்படும்போது இலக்கிய வழக்கில் இடம்பெறுகின்றது. ஒரு பொருளை அறிவிக்க ஒருமுறைமையில் வழங்கப்படும் /ஏற்கப்படும் ஒரு சொல் நிலையானதாக இருந்தால்தான் குழப்பமின்றி ஒரு பொருளை உணர்த்த இயலும்.* ***"காலந்தோறும ; சொல் மாறிக்கொண்டே இருக்குமானால், அதனால் பெருங்குழப்பங்கள் ஏற்படும.; அம்மாற்றத்தினால் ஏற்படும் விளைவும் பெரும்பயன் தரத்தக்கதாக அமையும் எனக் கொள்ள இயலாது"***[16] *என்னும் கூற்றால் மரபின் முக்கியத்துவத்தை அறியலாம். இம்மரபினைக் காலங்காலமாகப் பாதுகாப்பதும், வழக்கில் இடம்பெறச் செய்வதும், பின்வரும் வழித் தோன்றல்களின் கடமையும் பொறுப்புமாகும். இம்மரபினைத் தொல்காப்பியர் அவரது முன்னோர் வழிநின்று பாதுகாத்துள்ளார் என்றே தெரிகிறது. பன்னெடுங்காலமாகப் பயன்படுத்தப் பெற்று வரும் பொருண்மைகள், வழக்காறுகள், சொற்பெயர்கள், குறிப்பு நிலைகள் ஆகியனவே மரபுகளாகும். இவற்றைக் காலங்காலமாகப் பின்பற்றிப் பாதுகாக்க வேண்டும். செவ்வியல் இலக்கியப் பண்புகளில் மரபைக் காப்பதும் ஒன்றாகும். இதனைத் தொல்காப்பியர்,*

***"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"***
***(தொல்.சொல்.பெயரியல், நூற்.1)***

***"வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே***
***நிகழ்ச்சி அவர்கட்கு ஆகலான" (தொல்.சொல்.மரபியல், நூற்.94)***

*எனக் குறிப்பிட்டுள்ளார். நன்னூலார்,*

***"எப்பொருள் எச்சொலின் எவ்வா ருயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"***
***(நன்னூல், சொல்.பொதுவியல், நூற்.388)***

*என மரபு காத்தலை வலியுறுத்திக் கூறியுள்ளார். மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில் 'முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே' என்னும் வாக்கும் மரபினைக் காக்க வேண்டுமென வலியுறுத்துகின்றது.*

***'மரபியல்' - தேவையும் முக்கியமும்***

*முன்னோர் வழங்கிய சொல்முறைமைகளை முறைபிறழாமல் பயன்படுத்தும்போது அதன் தனித்துவம் வெளிப்படுவதில்லை. முறைமைகளை மாற்றும்போதும், புது முறைமைகளையும் இலக்கணங்களையும் பயன்படுத்தும் போதுதான் மரபுப் பெயர்களின் தனித்துவச் சிறப்பு வெளிப்படும். இன்று மக்களிடம் 'கோழிக்குஞ்சு' எனக் கூறுவது மரபாக உள்ளது. 'கோழிக்குட்டி' என்பது மரபாகாது. கோழி சேவலுடன் புணர்ந்து கருவாகி முட்டையிட்டு அடைகாத்துத் தோற்றுவிப்பது குஞ்சு. ஆனால் குட்டி என்பது கருவுற்று ஈனுதலால் பிறப்பது. கோழி முதலான பறவையினங்கள் அடைகாத்துப் பொறிப்பதால் குஞ்சு; யானை முதலான விலங்கினங்கள் புணர்ந்து கருவுற்று ஈனுதலால் குட்டி, இதனை உணராமல்*

மாற்றியும் திரித்தும் கூறும் போது பொருட்பிழையாகிவிடும். தொல்காப்பியர் இதனை உணர்ந்தே தம் காலத்து மரபுப் பெயர்களைக் காக்க மரபியலைப் படைத்துள்ளார்.

**மரபியல் - தொல்காப்பியப் புறனடை**

தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் இறுதியாக அமைந்த மரபியல் தொல்காப்பியத்திற்குப் புறனடையாகவும் அமைகின்றது. தொல்காப்பியர் தான் கூறவிழைந்த செய்திகளை விளக்கிவிட்டு 10+25+54 நூற்பாக்களில் 'மரபு' எது என விளக்கியுள்ளார். ச.சிவகாமி, "ஓரிலக்கியம் செவ்விலக்கியமாக, செம்மொழி இலக்கியமாகத் திகழ வேண்டுமாயின் அது, தான் எழுந்த காலச் சமுதாயத்தைக் காட்ட வேண்டும். இயல்பானதாக அதிகமான உயர்வு நவிற்சிக்கும் கற்பனைக்கும் இடங்கொடாமல் அமையவேண்டும். கூறும் கருத்துக்கள் உலகப் பொதுமை வாய்ந்ததாக இருக்கவேண்டும் என்பன போன்ற விதிமுறைகளுக்குக் கட்டுப்பட வேண்டியுள்ளது. இவற்றைப் பின்பற்றுவதற்கு அதனுள் இடம்பெறும் சொற்கள், மாந்தர் இயல்புகள், பிழைநீக்கிப் புதுமைப் பொலிவுடன் திகழ்தல் தேவையாகின்றன. இக்கூறுகளைச் சிறப்பித்தே மரபியல் எழுந்துள்ளமையும், செம்மாந்த படைப்பாக மனித வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடைய இயற்கையாக இலக்கியம் அமைதலே தொல்காப்பியரது எண்ணமாக அமைகின்றமையும் மரபியலின் தேவையை இயம்புகின்றன இலக்கியத்தில் மரபு போற்றப்படலை வலியுறுத்தவும், மரபு சார்ந்த கூறுகளைத் தெளிவுபடுத்தவும் அறிவுறுத்தவும் மரபியல் தேவையாயிற்று."[17] என மரபியலின் தனித்துவத்தை விளக்கியுள்ளார். 'மரபியல்' தமிழில் தோன்றிய பிற இலக்கண நூல்களில் இல்லை. தொல்காப்பியத்தில் மட்டுமே தனியொரு இயலாக வகுக்கப்பட்டு 112 நூற்பாக்களுடன் தனிப்பெருமை கொண்டுள்ளது.

**மரபியல் பயன்பாடு**

மரபியலின் பயன்பாட்டினைத் தொல்காப்பியத்தின் பின்வரும் நூற்பாக்கள் உணர்த்துகின்றன.

> **"மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை**
> **மரபு வழிப்பட்ட சொல்லி னான" (தொல்.பொருள்.மர.நூற்.92)**
> **"மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்" (மேலது, 93)**
> **"மரபுநிலை திரியா மாட்சிய வாகி" (மேலது,95)**

இந்நூற்பாக்கள் மரபானது இலக்கியப் படைப்பாக்கம் பெறுவதன் பயன்பாடுகளைச் சுட்டி நிற்கின்றன. படைப்பாளன் தன்னுடைய படைப்புக்களில் மரபுச் சொற்களை மாற்றிக் கூறினால் படிப்போறுக்கு அவன் கூற விழையும் கருத்து அவனைச் சென்றடைவதில்லை. இந்நூற்பாக்கள் தொல்காப்பிய மரபியலுக்கு மட்டும் அல்லாமல் தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் ஆகிய முழுமைக்கும் புறனடையாக அமைகின்றது. மரபியலின் கட்டமைப்பு தொல்காப்பியர் மரபியலில் உயிரினங்களின் இளமைப்பெயர்கள், ஆண்பாற் பெயர்கள், பெண்பாற் பெயர்கள், உயிர்களின் பாகுபாடு, (ஓரறிவு உயிர்கள் முதல் ஆறறிவு உயிர்கள் வரை), உயிரினவகை, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் தொழில் மரபுகள், நூலின் இலக்கணம், முதல்நூல், வழிநூல், நான்குவகை வழிநூல்கள், நூற்பாவின் இலக்கணம், காண்டிகையுரை, விளக்கவுரை, நூலின் பத்துக்குற்றங்கள், முதனூலின் சிதைவின்மை, வழிநூலின் குறைபாடு, முப்பத்திரண்டு உத்திகள் என்னும் செய்திகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளார்.

**முடிவுரை**

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் 'நூன்மரபு' எனத் தொடங்கி, பொருளதிகாரத்தில் மரபியலில் தம் நூலினை நிறைவு செய்துள்ளார். தமிழ்ப் பண்பாட்டில் முன்னோர் மரபுகளைப் பேணிப் பாதுகாக்கும் அவசியத்தைச் செறிவாக உணர்த்தியுள்ளார்.

**அடிக்குறிப்புக்கள்**

1. Tamil Lexicon, Vol.V., part-I, p.3085 (Published under the authority of Madras University)
2. கந்தையா ந.சி., செந்தமிழ் அகராதி, ப.590.
3. சுப்பிரமணியன் ச.வே., மெய்யப்பன் தமிழ் அகராதி, ப.934.

4. மாருதிதாசன், கே.மாணிக்கமுதலியார் முதலானோர் (பதி.ஆ.), நர்மதாவின் தமிழ் அகராதி, ப.724.
5. இராமகிருஷ்ணன் எஸ். (பதி.ஆ.), க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.810.
6. புலவர் குழு, கழகத்தமிழ் அகராதி, ப.742.
7. கௌமாரீஸ்வரி எஸ். (பதி.ஆ.), கௌரா தமிழ் அகராதி, ப.548.
8. இராகவையங்கார் .மு., தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி, ப.172.
9. இலக்குவனார் .சி, தொல்காப்பிய ஆராய்ச்சி, ப.250.
10. இராசமாணிக்கனார். மா., தமிழ்மொழி இலக்கிய வரலாறு - சங்ககாலம், ப.92.
11. சிவகாமி ச., செவ்வியல் தமிழ் ஆய்வுகள், ப.2.
12. .கிருஷ்ணமூர்த்தி .சா, உரைச்சொற்களஞ்சியம், ப.204.
13. சுப்புரெட்டியார் .ந., தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.396.
14. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, ப.48.
15. தெய்வேந்திரன் மு., தொல்காப்பிய மரபியலும் சங்க அகஇலக்கியங்களும், பக்.35- 38.
16. மோகனராசு .கு, திருக்குறளில் மரபுகள், ப.ஓi.
17. சிவகாமி .க., செவ்வியல் தமிழ் ஆய்வுகள், ப.8.

**பயன்பட்ட நூல்கள்**


1. அகத்தியலிங்கம்,ச., தொல்காப்பிய உருவாக்கம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2001.
2. இராகவையங்கார், மு., தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, மானாமதுரை, 1960.
3. இலக்குவனார்,சி., தொல்காப்பிய ஆராய்ச்சி, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1961.
4. கணேசையர். சி.(பதி.ஆ.), தொல்காப்பிய பொருளதிகார மூலமும் பேராசிரியருரையும், பின்னான்சியல்கள் - பாகம் இரண்டு, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007.
5. சுப்புரெட்டியார், ந., தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, பழனியப்ப பிரதர்ஸ், சென்னை, 2002.
6. வௌ;ளைவாரணன், க. (உரை.ஆ.), தொல்காப்பியம் - மரபியல் உரைவளம், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1994.
7. இராசமாணிக்கனார், மா., தமிழ்மொழி இலக்கிய வரலாறு - சங்ககாலம், பாரிநிலையம், சென்னை, 1969.
8. சிவகாமி,ச., செவ்வியல் தமிழ் ஆய்வுகள், மாதவி பதிப்பகம், அமுதநிலையம், சென்னை, 2008.
9. பெரியகருப்பன், இராம., சங்க இலக்கிய ஒப்பீடு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2007.
10. கதிரைவேற்பிள்ளை, நா., தமிழ்மொழி அகராதி, ஏசியன் எடுகேஷனல் சர்வீசஸ், புதுதில்லி, 1984.
11. கந்தையா, ந.சி., செந்தமிழ் அகராதி, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1999.
12. கழகப் புலவர் குழு, கழகத்தமிழ் அகராதி, கழக வெளியீடு, சென்னை, 2010.
13. கிருஷ்ணமூர்த்தி, சா., உரைச்சொற்களஞ்சியம், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1985.
14. கௌமாரீஸ்வரி, எஸ். (பதி.ஆ.), கௌரா தமிழ் அகராதி, சாரதா பதிப்பகம், சென்னை, 2010.
15. சுப்பிரமணியன், ச.வே., மெய்யப்பன் தமிழ் அகராதி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2009.
16. மோகனராசு, கு., திருக்குறளில் மரபுகள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1981.
17. தெய்வேந்திரன், மு., தொல்காப்பிய மரபியலும் சங்க அக இலக்கியங்களும், இளவேனில் பதிப்பகம், தாராமங்கலம், 2018.


********* ********* ********** ********* ********* ********** ********** **********